IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 128/2025 Date : 20.05.2026 P.W. 3 / LW.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரா | ஆதார்எண் | |
| கணவர் பெயர் | ராமலிங்கம் | தொழில் | *வீட்டுகுடித்தனம்* |
| கிராமம் | கீழப்பாளையம் | வயது | 55 |
| 1 முதல் 5 எதிரிகள் ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் கீழப்பாளையம் கிராமத்தில் வசித்து சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1, 2 யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் எனது மருமகள் இளவரசி கையொப்பம் செய்தார். சுமார் 1-1/2 வருடங்களுக்கு முன்பாக நான் வீட்டில் இருந்தபோது போலிசார் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தார் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்திற்கு வரசொன்னதால் அங்கு சென்றிருந்தேன். அப்போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். **பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2ஆகும்.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது 30.07.2024 அன்று 15-00 மணிக்கு எலவனாசூர்கோட்டை காவல்நிலையத்தார் காவல்நிலைய குற்ற எண்.213/2024 வழக்கு சம்மந்தமாக சம்பவஇடத்திற்கு வந்து சம்பவஇடத்தை பார்வையிட்டு படம் வரைந்த போது நானும், வள்ளுவன் என்பவரும் பார்வைமகசரில் கையொப்பம் செய்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

**இல்லை.**

**மறுவிசாரணை – இல்லை.**

Typed by E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.20 18:14:14 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 128/2025 Date : 20.05.2026 P.W. 2 / LW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரஞ்ஜோதி | ஆதார்எண் | |
| தந்தை பெயர் | ராமலிங்கம் | தொழில் | *சலூன் கடை வைத்துள்ளேன்.* |
| கிராமம் | கீழப்பாளையம் | வயது | 38 |
| 1 முதல் 5 எதிரிகள் ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் கீழப்பாளையம் கிராமத்தில் வசித்து சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 யை தெரியும் அவர் என் மனைவி. ஆஜர் எதிரிகளை தெரியும். நான் என் குழந்தையை பள்ளிக்கு அழைத்து செல்லும்போது சிலநபர்கள் வழிமறித்து என்னை அடித்துவிட்டார்கள். எதிரிகளுக்கும் எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் எதிரிகள் தான் என்னை அடித்திருப்பார்கள் என்ற அனுமானத்தின்பேரில் எதிரிகள் மீது என் மனைவி புகார் கொடுத்தார். எதிரிகள் என் மனைவி வழி உறவினர்கள். எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டோம். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது கடந்த 26.07.2024 ம் தேதி என்னிடம் எலவனாசூர்கோட்டையை சேர்ந்த வேலு மகன் சீனிவாசன் என்பவர் அசிங்கமாக பேசியதை நான் கேட்டபோது ஏற்பட்ட தகராறு சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மேற்படி நபரை அழைத்து விசாரித்து எச்சரித்து அனுப்பியதால் முன்விரோதம் கொண்ட சீனிவாசன் அவரது மச்சான்கள் முருகன், வினோத், செல்வி மற்றும் வானிஸ்ரீ ஆகியோர்கள் நேற்று 29.07.2024 ம் தேதி காலை 9.00 மணியளவில் நான் என் மகன் பரத்தை அரசினர் ஆண்கள் மேல்நிலை பள்ளியில் இறக்கிவிட சென்றபோது மேற்படி நபர்கள் அனைவரும் நான் சென்ற இருசக்கரவாகனத்தை வழிமறித்து சீனிவாசன் என்பவர் என்னை பார்த்து ஏய் தேவிடியா பையா நீ என் மீதே புகார் தருகிறாய் என சொல்லி திட்டினார் என்றும், நான் ஏன் என்னிடத்தில் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு வினோத் என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் இதோடு ஒழிந்துபோடா என கூறி என் தலையில் அடித்தார் என்றும், நான்

வலது கையால் தடுத்ததால் வலது கை சுண்டுவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், நான் வலது கையால் தடுக்காமல் இருந்தால் மேற்படி நபர் அடித்த அடி என் தலையில் பட்டு இறந்தே போய் இருப்பேன் என்றும், உடன் இருந்த முருகன் தேவிடியா பையனை உயிரோடு விடாதே என கூறி கையில் வைத்திருந்த கட்டையால் எனது வலது காலில் அடித்ததால் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், சீனிவாசன் கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டியதால் இடது கையில் காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி நபர்கள் இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தினார்கள் என்றும், அங்கிருந்த நபர்கள் சண்டையை மறித்தபோது மேற்படி நபர்கள் அனைவரும் கையில் வைத்திருந்த கட்டை மற்றும் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், நான் செல்போன் மூலமாக என் மனைவிக்கு தகவல் சொல்லி என் மனைவி சம்பவ இடத்திற்கு வந்து என்னை உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்து விட்டார் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதாலும், எதிரிகள் என் மனைவி வழி உறவினர்கள் என்பதாலும், எதிரிகளை காப்பாற்ற வேண்டி எதிரிகளுக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

மறுவிசாரணை – இல்லை.

Typed by E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.20 18:14:39 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 128/2025 Date : 20.05.2026 P.W. 1 / LW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளவரசி | ஆதார்எண் | |
| கணவர் பெயர் | பரஞ்ஜோதி | தொழில் | *வீட்டு குடித்தனம்* |
| கிராமம் | கீழப்பாளையம் | வயது | 32 |
| 1 முதல் 5 எதிரிகள் ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் கீழப்பாளையம் கிராமத்தில் வசித்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் என் உறவினர்கள். எதிரிகளுக்கும் என் கணவருக்கும் எந்த தகராறும் இல்லை. எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் என்ன என்று எனக்கு தெரியாது. **புகாரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ–1** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது கடந்த 26.07.2024 ம் தேதி என்னிடம் எலவனாசூர்கோட்டையை சேர்ந்த வேலு மகன் சீனிவாசன் என்பவர் அசிங்கமாக பேசியதை என் கணவர் பரஞ்ஜோதி கேட்டபோது ஏற்பட்ட தகராறு சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மேற்படி நபரை அழைத்து விசாரித்து எச்சரித்து அனுப்பியதால் முன்விரோதம் கொண்ட சீனிவாசன் அவரது மச்சான்கள் முருகன், வினோத், செல்வி மற்றும் வானிஸ்ரீ ஆகியோர்கள் நேற்று 29.07.2024 ம் தேதி காலை 9.00 மணியளவில் எனது கணவர் பரஞ்ஜோதி என் மகன் பரத்தை அரசினர் ஆண்கள் மேல்நிலை பள்ளியில் இறக்கிவிட சென்றபோது மேற்படி நபர்கள் அனைவரும் என் கணவர் சென்ற இருசக்கரவாகனத்தை வழிமறித்து சீனிவாசன் என்பவர் என் கணவரை பார்த்து ஏய் தேவிடியா பையா நீ என் மீதே புகார் தருகிறாய் என சொல்லி திட்டினார் என்றும், என் கணவர் ஏன் என்னிடத்தில் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு வினோத் என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் இதோடு ஒழிந்துபோடா என கூறி என் கணவர் தலையில்

அடித்தார் என்றும், என் கணவர் வலது கையால் தடுத்ததால் வலது கை சுண்டுவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், எனது கணவர் வலது கையால் தடுக்காமல் இருந்தால் மேற்படி நபர் அடித்த அடி தலையில் பட்டு இறந்தே போய் இருப்பார் என்றும், உடன் இருந்த முருகன் தேவிடியா பையனை உயிரோடு விடாதே என கூறி கையில் வைத்திருந்த கட்டையால் எனது கணவர் வலது காலில் அடித்ததால் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், சீனிவாசன் கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டியதால் இடது கையில் காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி நபர்கள் இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தினார்கள் என்றும், அங்கிருந்த நபர்கள் சண்டையை மறித்தபோது மேற்படி நபர்கள் அனைவரும் கையில் வைத்திருந்த கட்டை மற்றும் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக எனது கணவர் பரஞ்ஜோதி செல்போன் மூலமாக தகவல் சொல்ல நான் சம்பவ இடத்திற்கு சென்று எனது கணவரை உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்து விட்டு புகார் மனு கொடுத்தேன் என்று புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளை காப்பாற்ற வேண்டி எதிரிகளுக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

மறுவிசாரணை – இல்லை.

Typed by E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.20 18:14:25 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.